ௐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
## (பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531



ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்




## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM
VEDANTA SASTHRA PRACHARA TRUST
VEDAPURI, THENI-625 531-TAMIL NADU

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
17, மாசி 2026

Date:
1, March 2026

www.vedaneri.org


வகுப்பு 26

அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் : 20

# பயனில சொல்லாமை

(பயனில்லாத சொற்களைப் பேசாமை)






தமக்கும் பிறருக்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றையும் தராதவற்றைப் பேசாதிருத்தல்.

பொய், குறளை (புறங்கூறல்), கடுஞ்சொல், பயனில் சொல் என்பவை வாக்கினில் நிகழும் பாவங்களாகும்.

பொய்யை (பின்னர்) துறவறவியலில் வாய்மையாலும், கடுஞ்சொல்லை இனியவை கூறலாலும் (அதி.10), குறளையைப் புறங்கூறாமையாலும் (அதி.19) விலக்கி, பயனில சொல்லுதலை இவ்வதிகாரத்தால் விலக்குகிறார்.





குறள்கள் : 1 - 6

**பயனில்லாத சொற்களைச் சொல்லுதலால் உண்டாகும் குற்றம்**

1. அனைவரின் வெறுப்புக்கும் ஆளாவான்.
2. தீய செயல்களை விடத் தீமையானது.
3. அறியாமையை மற்றவர்களுக்குக் காட்டும்.
4. நற்குணங்கள் நீங்கிப் போகும்.
5. மேன்மையும் நன்மதிப்பும் அழியும்.
6. அறிவற்ற மனிதப்பதர் எனக் கருதத்தக்கவன்.

குறள்கள் : 7 - 9

**பயனற்ற சொற்களைச் சொல்லாமையின் குணம்**

7. தீயசெயல்களை விலக்குவதை விட அதிக நன்மையைத் தரும்.
8. விவேகியர் சொல்லார். (அறிவின் அடையாளம்)
9. மாசறு காட்சியவர் மறந்தும் சொல்லார்.

குறள்: 10

10. சொல்லத்தகுவனவும் தகாதனவும்.



# 1. பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாரும் எள்ளப் படும்.



அறிவுடையவர்கள் பலரும் கேட்டு வெறுக்குமாறு பயனில்லாத சொற்களைப் பேசுகிறவன் அனைவராலும் வெறுக்கப்படுவான்.

பல்லார் = பலர் - பயனை ஆராய்ந்து அறியும் அறிவுடையவர்.
முனிய = வெறுக்க
எல்லாரும் - அறிவுடையவர், இல்லாதவர் எல்லாரும்.

பயனை ஆராய்ந்து அறியும் விவேகம் உள்ளவர்கள் பயனற்ற விஷயங்களைப் பேசுபவனை நேரத்தை வீணடிப்பவன் என்று கடிய மற்றவரும் அப்படியே வெறுப்பர்.

பயனில்லாத வார்த்தைகளைப் பேசுபவன் அனைவராலும் இகழப்படுவான்.

## 2. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
## நட்டார்கண் செய்தலின் தீது.

அறிவுடைய பலர்முன்னே பயனற்ற சொற்களைப் பேசுதல் நட்புக்குரியவரிடம் விரும்பத்தகாத செயல்களைச் செய்வதைக் காட்டிலும் தீயதாகும்.

பயனில = பயனில்லாத சொற்கள்
நயனில = விரும்பத்தகாத செயல்கள் - வெறுக்கப்படும் செயல்கள்.
நட்டார் = நட்புக்குரியவர்.

பயனில பேசுவது நயனில செய்வதை விட அதிக இகழ்ச்சியை உண்டாக்கும்.



## 3. நயனிலன் என்பது சொல்லும் பயனில
## பாரித் துரைக்கும் உரை.

பயனில்லாத விஷயங்களை ஒருவன் விரித்துப் பேசும் சொற்களே, அவன் நீதியில்லாதவன் என்பதனைக் காட்டும்.

பாரித்து = விவரித்து

பயனற்ற கருத்துக்களை பெரிதாகப் பேசுவது அவன் அறம் அறியாதவன் என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்கும்.



## 4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
## பண்பில்சொல் பல்லார் அகத்து.




பயனுடன் சேராத குணமில்லாத சொற்களை ஒருவன் பலரிடத்துச் சொல்லுவானென்றால் நீதியோடு பொருந்தாததாகி நற்குணங்களிலிருந்து அவனை நீங்கச் செய்யும்.

பண்பில் சொல் = சொற்குணங்கள் இல்லாத சொற்கள்.
சொற்குணங்கள் - இனிமை, உண்மை, தீமையின்மை, கேட்பவரை தன்வசப்படுத்தல் போன்றவை.

நற்குணங்களற்ற சொற்கள் நற்குணங்களிலிருந்து ஒருவனை விலகச் செய்யும்.

வீண் பேச்சுப் பேசுபவன் வாழ்க்கை வீணாய்ப் போகும்.

# 5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில நீர்மை உடையார் சொலின்.




பயனில்லாத சொற்களை நற்குணங்களை உடையவர் சொன்னால் அவரது உயர்வும் நன்மதிப்பும் உடனே அவரிடமிருந்து விலகிப் போய் விடும்.

நீர்மை = நற்குணங்களின் தன்மை
சொலின் = சொன்னால்
சீர்மை = மேன்மை, உயர்வு
சிறப்பு = நன்மதிப்பு

நற்குணங்கள் உடையவர் பயனற்ற சொற்களைச் சொல்ல மாட்டார். சொன்னாரென்றால் அவரது அறிவின் மேன்மையும் அதனால் ஏற்பட்டிருக்கும் நன்மதிப்பும் போய்விடும்.

நற்பண்பு உடையவர் பயனற்ற சொற்களைப் பேசினால் அவரது மேன்மையும் ஸமூகமதிப்பும் அழியும்.

## 6. பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல் மக்கட் பதடி எனல்.



பயனில்லாத சொற்களைப் பலமுறைச் சொல்பவனை மனிதன் என்று சொல்லற்க, மக்களுள் பதர் என்று சொல்லுக.

பாராட்டுதல் = பலதரம் சொல்லுதல்.
பதர் = அரிசியில்லாத நெல்.

அரிசி எனும் உள்ளீடு இல்லாத நெல் பதர் எனப்படும். அறிவென்னும் உள்ளீடு இல்லாத மனிதன் மனிதப்பதர் எனக் கருதப்பட வேண்டியவன் ஆவான்.

இவை ஆறுபாட்டாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலால் உண்டாகும் குற்றம் கூறப்பட்டது.

## 7. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர் பயனில சொல்லாமை நன்று.


அறிவுடையவர் நீதியில்லாத சொற்களைப் பேசினாலும் பரவாயில்லை. ஆனால் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லதாகும்.

நயனில = நீதியில்லாத.

சொல்லினும் என்றதனால் சொல்லமாட்டார் என்பது பெறப்பட்டது. நயனில்லாத சொற்களைப் பேசுவதை விட பயனில்லாத சொற்களைப் பேசுவதை விலக்குவது அதிக நன்மையைத் தரும்.



## 8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார் பெரும்பயன் இல்லாத சொல்.



அறிதற்கரிய பயன்களை ஆராய்ந்து அறியும் அறிவினை உடையவர்கள் மிகுந்த பயன்தராத சொற்களைப் பேச மாட்டார்கள்.

அரும்பயன் = அரிய பயன். எளிதில் அடைய முடியாததான பிறவிப்பயன். சொர்க்கம், வீடுபேறு போன்றவை.

நல்ல விவேகம் உடையவர் குறைவான பயனினையுடைய சொற்களையோ பயனற்ற சொற்களையோ பேசுவதில்லை.

## 9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த மாசறு காட்சி யவர்.

மயக்கம் இல்லாத தூய அறிவினை உடையவர் பொருள் இல்லாத சொற்களை மறந்தும் பேசமாட்டார்.




பொருள் தீர்ந்த = அர்த்தத்திலிருந்து நீங்கிய - அர்த்தமில்லாத.
பொச்சாப்பு - மறதி. பொச்சாந்து = மறந்தும்.
மருள்தீர்ந்த = மயக்கத்திலிருந்து நீங்கிய - மயக்கம் இல்லாத.
மாசறு காட்சி = தூய அறிவு - மெய்யறிவு.

தவறாத புரிதல் இல்லாத, மெய்ப்பொருளைப் பற்றிய தெளிந்த அறிவினை உடையவர் கவனக் குறைவினாலும் பயனற்றவற்றைப் பேசமாட்டார்.

இவை மூன்றுபாட்டாலும் பயனற்ற சொற்களைச் சொல்லாமையின் குணம் கூறப்பட்டது.

## 10. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
## சொல்லில் பயனிலாச் சொல்.

சொற்களில் பயனுள்ள சொற்களை (மட்டுமே) பேசுக. சொற்களில் பயனில்லாத சொற்களைப் பேசாதொழிக.

கேட்பவர்க்கு இன்பமும் நன்மையும் தருகின்ற சொற்களை மட்டுமே பேசவேண்டும். இல்லாதவற்றை விலக்க வேண்டும்.

இதனால் சொல்லத்தக்கனவும் சொல்லத்தகாதனவும் நிச்சயிக்கப்பட்டன.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com